**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.2 /2021**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.11.2025 | | |
| பெயர்: | ராஜேஷ்<br>(PW– 1 Cross ) | தகப்பனார் பெயர்: | சேகர் |
| கிராமம்: | மடவாமேடு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | மீன்பிடித்தொழில் | வயது : | 36/2025 |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :12.11.2025**

**(ஆரம்பித்த நேரம்– 13.34)**

எனது தகப்பனார் பெயர் சேகர். இந்த வழக்கு எனது தகப்பனார் மற்றும் தாயாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் பிரதிவாதிகளுக்கு இரண்டாவது மகன். எனது மனைவியின் ஊர் என்பது சிதம்பரம் தாலுக்கா, பொன்னன் திட்டு அஞ்சல், முடசல்ஓடை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பட்டா சேகர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் சுனாமியில் வீடு சேதமடைந்ததற்கு பிறகு அரசு சார்பில் புதிதாக 2006–ல் வீடு கட்டிகொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி வீடு 2010–ல் சேகரால் விரிவாக்கம் செய்யப்பட்டது என்றால் இல்லை நான் அனுப்பிய பணத்தை கொண்டு விரிவாக்கம் செய்யப்பட்டது. நான் பணம் அனுப்பியதற்கான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 2008–ல் சிங்கப்பூர் சென்றேன். சிங்கப்பூரில் 2011 வருடம் வரை இருந்தேன். நான் 12–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் டிப்ளோமோ படித்துள்ளதாக போலி சான்றிதழ் மூலமாக பொய்யாக கூறி வேலைக்கு சென்ற காரணத்தினால் சிங்கப்பூர் அரசாங்கத்தின் சார்பில்

கண்டுப்பிடிக்கப்பட்டு திரும்பவும் சிங்கப்பூர் வராதவாறு திருப்பி அனுப்பபட்டேன் என்றால் சரியல்ல.

3. சிங்கப்பூர் செல்வதற்கு சேகர்தான் ரூ. 1,50,000/– கடன் வாங்கி என்னை அனுப்பினார் என்றால் சரியல்ல. அந்த கடன் தொகையை இன்று வரையில் சேகர் தான் அடைத்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் 2013–ம் வருடம் துபாய் சென்றேன். துபாய்க்கு என்று தனியாக பாஸ்போர்ட் எடுக்கவில்லை அதே பாஸ்போர்ட்தான்.நான் துபாய் செல்வதற்கு எனது தாயார் கிரிஜா ரூ. 90,000/– கடன் வாங்கி என்னை அனுப்பினார் என்றால் சரியல்ல. நான் துபாய் போனபிறகு நான்கு மாதத்தில் திரும்ப வந்துவிட்டேன் என்றால் திருமணத்திற்காக திரும்ப வந்தேன். நான் சுமார் 5 மாதங்கள் கழித்து திரும்ப துபாய்க்கு சென்றேன்.

4. அதன்பிறகு சுமார் 2 வருடங்கள் கழித்து துபாயிலிருந்து ஊருக்கு வந்தேன். சிங்கப்பூர் மற்றும் துபாயிலிருந்து சமயத்தில் எனது தகப்பனார் சேகருக்கு நான் பணம் ஏதும் அனுப்பினேனா என்றால் இல்லை, ஆனால் தாயார் பெயரில் அனுப்பினேன். நான் துபாயிலிருந்த சமயத்தில் எனது தகப்பனாரும் துபாயில்தான் இருந்தார். நான் எனது தாயாருக்கு அனுப்பிய பணத்திற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் சிங்கப்பூர் மற்றும் துபாய் சென்றது குறித்து எனது பாஸ்போர்ட்டை தாக்கல் செய்தால் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி பாஸ்போர்ட்டை என்னால் தாக்கல் செய்யமுடியும்.

5. நான் திருமணம் ஆன 1 மாதம் கழித்து எனது பெற்றோருடன் சண்டையிட்டு எனது மாமனார் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனது மனைவியை மாமனார் வீட்டில் விட்டுவிட்டு நான் துபாய் சென்றேன் என்றால் சரிதான். நான் எனது தாயாரை கேவலமாக திட்டியதால்தான் அவர் தற்கொலைக்கு முயன்றார் என்றால் சரியல்ல. நான் எனது தாயாரை கழுத்தை நெறிக்க முயற்சி செய்து அதனால் புதுப்பட்டிணம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

அந்த வழக்கில் நான் ஜாமினில் வெளியே வந்திருக்கிறேன். தாவா சொத்தை எனது பாட்டானார் கந்தசாமி அனுபவித்து வந்தார் என்று கூறியதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பியதன் மூலமாக தாவா சொத்தில் உள்ள வீடு கட்டப்பட்டது என்றும், அதில் நாங்கள் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றும் கூறினால் தவறு என்றால் சரியல்ல.

6. நான் வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட பணத்திற்கு கணக்கு கேட்டு நான் ஏதேனும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பியதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனது பெயரில் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண். 236/2020 என்ற எண்ணில் எனது தகப்பனார் தொடர்ந்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பதிலடிக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய இந்த வழக்கில் எவ்வித உண்மை தண்மையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தற்போதும் எனது மாமனார் ஊரான முடசல் ஓடையில்தான் குடியிருந்து வருகிறேன் என்றாலும், அவ்வப்போது எனது பெற்றோர் ஊருக்கு வந்து அவர்களுக்கு தொல்லை கொடுப்பதுதான் எனது வழக்கம் என்றாலும் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் என்பது 1-ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டிற்கு நான் கையூட்டு கொடுத்த காரணத்தினால்தான் எனது பெயரில் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பணம் செலுத்திய காரணத்தினால் உரிமையாளர் இடத்தில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முடசல் ஓடையில் இருந்துக்கொண்டு திட்டமிட்டு வா.சா.ஆ.2 ஆவணமான எனது மகளின் பிறப்பு சான்றிதழில் மடவாமேடு முகவரியை கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற காரணத்தினால்தான் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களில் திட்டமிட்டு தவறான முகவரி

கொடுக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. என்னிடம் காட்டப்படும் வா.சா. ஆ 5 ஆவணமான வங்கி கணக்கு புத்தகம் என்பது 2017 முதல் 2020 வரையிலான ஆண்டிற்கு உரியது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 1–ம் பிரதிவாதிக்கு பணம் அனுப்பியதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்–14.14)**